दक्षिण रेलवे/Southern Railway

चेन्नै मंडल/Chennai Division

No.PUB/MAS/2021/01/07 Date:21.01.2021

प्रेस विज्ञप्ति /PRESS RELEASE

**PURATCHI THALAIVAR Dr. M G RAMACHANDRAN CENTRAL RAILWAY STATION IS THE FIRST RED CATEGORY STATION TO OBTAIN CONSENT TO OPERATE, IN SOUTHERN RAILWAY**

Consent to Operate (CTO) under Air Act 1981 and Water Act 1974 has been granted to Puratchi Thalaivar DR M G Ramachandran Central Railway Station by Tamil Nadu Pollution Control Board on 20.01.2021(Wednesday).

The Consent to Operate has been granted to Dr.MGR Chennai Central railway station, as the station has complied requirements of Air and Water Act (Prevention and Control of Pollution). As per the Water Act 1974 and Air Act 1981, it is mandatory to obtain “Consent to Operate” from respective State Pollution Control Board. The process for obtaining consent to Operate involves making an application in a prescribed format to respective State Pollution Control Board along with required documents and prescribed fees. It is followed by physical inspection of the site (railway station) to verify the compliance and implementation of the conditions issued by the State Pollution Control Board.

The Central Pollution Control Board (CPCB) has classified railway stations under red, orange and green categories based on the waste water generated and disposal of untreated water into the municipal drain systems. While railway stations generating waste water equal to or more than 100 Kilo litres per day would be categorized as red, those greater than 10 kilo litres/day but less than 100 kl/day would come under Orange category. Railway stations with less than 10 kl/day would be categorized as green.

Dr. M G Ramachandran Central railway station is the first Red Category station to obtain Consent to Operate, in Southern Railway. The railway administration has achieved this, by implementing the mission “Swachch Bharath” through proper and dedicated waste water management system and recycling of waste water to usable hence minimized the disposal of waste water to drains. By this, pollution caused to the ground water and land is also reduced to a considerable level. Previously two stations of Southern Railway have obtained Consent to Operate. Kochuveli station and Ottapalam station which has been categorized as Orange.

Sd/-
ए.एलुमलै/ (A.Elumalai)
जनसंपर्क अधिकारी/ Public Relations Officer
चेन्नै मंडल/ Chennai Division

https://sr.indianrailways.gov.in/index.jsp
https://twitter.com/DrmChennai

**சென்னை கோட்டம்**
**தெற்கு ரயில்வே**

No.PUB/MAS/2021/01/07 நாள்: 21.01.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

**தெற்கு ரயில்வேயின் சிவப்பு பிரிவின்கீழ்வரும் ரயில் நிலையங்களுள் "செயல்பட ஒப்புதல்" சான்றிதழை பெறும் முதல் ரயில் நிலையம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் மத்திய ரயில் நிலையம்**

"ஒப்புதல்" என்பது சம்பந்தப்பட்ட மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் ஒரு வசதியினை நிறுவ மற்றும் இயக்க, காற்று (மாசுபடுவதை தடுத்தல் மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 மற்றும் தண்ணீர் (மாசுபடுவதைத் தடுத்தல் மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 ன் படி வழங்கப்படும் ஒப்புதல் என பொருள்படும். இந்த "செயல்பட ஒப்புதல்"(சி.டி.ஓ) சான்றிதழானது, புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி. ராமச்சந்திரன் மத்திய ரயில் நிலையத்திற்கு தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் 20.01.2021 (புதன்கிழமை) வழங்கப்பட்டுள்ளது.

காற்று மற்றும் தண்ணீர் சட்டத்தின் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) தேவைகளை பூர்த்தி செய்துள்ளதன் காரணங்களுக்காக டாக்டர் எம்.ஜி. ஆர் சென்னை மத்திய ரயில் நிலையத்திற்கு செயல்படுவதற்கான "ஒப்புதல்" வழங்கப்பட்டுள்ளது. தண்ணீர் சட்டம் 1974 மற்றும் காற்றுச் சட்டம் 1981 ன் படி, அந்தந்த மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து "செயல்பட

ஒப்புதல்" சான்றிதழ் பெறுவது கட்டாயமாகும். செயல்படுவதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கான செயல்முறையானது, தேவையான ஆவணங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களுடன் அந்தந்த மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு ஒரு குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பம் செய்தலை உள்ளடக்கியது. அதைத் தொடர்ந்து மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் வழங்கிய நிபந்தனைகளின் இணக்கம் மற்றும் செயல்பாட்டை சரிபார்க்க நிறுவனத்தை (ரயில் நிலையம்) நேரில் ஆய்வு செய்யப்படுகிறது.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் (சிபிசிபி), ரயில் நிலையங்களால் உருவாக்கப்படும் கழிவு நீர் மற்றும் சுத்திகரிக்கப்படாத நீரை நகராட்சி கழிவு நீர் வடிகால் அமைப்புகளில் அகற்றுதல் போன்ற அளவீடுகள் மூலம் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது. ஒரு நாளைக்கு 100 கிலோ லிட்டருக்கு சமமான அல்லது அதற்கு அதிகமான கழிவுநீரை உருவாக்கும்/வெளியேற்றும் ரயில் நிலையங்கள் சிவப்பு என வகைப்படுத்தப்படும், 10 கிலோ லிட்டருக்கு மேல் ஆனால் ஒரு நாளைக்கு 100 கிலோ லிட்டருக்கும் குறைவானவை ஆரஞ்சு வகையின் கீழ் வரும். ஒரு நாளைக்கு 10 கிலோ லிட்டருக்கும் குறைவாக கழிவு நீர் உருவாக்கும்/வெளியேற்றும் ரயில் நிலையங்கள் பச்சை நிறமாக வகைப்படுத்தப்படும்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் மத்திய ரயில் நிலையம், தெற்கு ரயில்வேயில் "செயல்பட ஒப்புதல்" பெறும் முதல் சிவப்பு வகைப்படுத்தப்பட்ட ரயில் நிலையம் ஆகும். சரியான மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய கழிவு நீர் மேலாண்மை அமைப்பு மூலம் "தூய்மை இந்தியா" என்ற சீரிய திட்டத்தினை அமல்படுத்தியதன் காரணமாகவும், கழிவுநீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதன் மூலமும் ரயில்வே நிர்வாகம் இந்த சான்றிதழை பெற்றுள்ளது. அதோடு மட்டுமல்லாமல், இதன் மூலம், நிலத்தடி நீர் மற்றும் நிலத்தில் ஏற்படும் மாசு கணிசமான அளவிற்குக் குறைக்கப்படுகிறது. முன்னதாக தெற்கு ரயில்வேயின் இரண்டு ரயில் நிலையங்களான, ஆரஞ்சு பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ள கொச்சுவேலி ரயில் நிலையம் மற்றும் ஒட்டபாலம் ரயில் நிலையம் 'செயல்பட ஒப்புதல்' சான்றிதழை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

-Sd-

**அ. ஏழுமலை**
**மக்கள் தொடர்பு அதிகாரி**
**சென்னை கோட்டம்**